பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 30 வியாழக்கிழமை 16.12.2021 கதிர் 41

**இனிது ரகசியம் அல்ல!**

தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் கட்சிகளை ஒரு நிலைப்பாட்டுக்கு இணங்க வைப்பது என்ற பெயரில் புளொட்டின் முழு ஒத்துழைப்பு மற்றும் ஆசீர்வாதத்துடன் ரெலோ ஆரம்பித்த முயற்சி உண்மையில் தமிழர் தரப்பை ஒன்று படுத்துவது பக்கம்02

# எதிர்ப்புகளை முறியடித்து வென்றார் மணி!

## யாழ். மாநகர சபையின் 'பட்ஜட்' 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்



யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் அரசியல் எதிர்ப்புகளை முறியடித்து, தாம் சமர்ப்பித்த தமது சபையின் வரவு - செலவுத் திட்டத்தை மூன்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்ற வைத்து வெற்றி பெற்றார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் யாழ். மாநகர மேயரால் நேற்றுக் காலை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதங்களையடுத்து பாதீடு மீது பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது.

பாதீட்டுக்கு ஆதரவாக மேயர் அணியைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 10 உறுப்பினர்களும், 2

# குடாநாட்டுடன் நல்லுறவை பேண விரும்புகின்றது சீனா

## யாழ்.வந்த தூதுவர் தெரிவிப்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்துக்கும் சீனாவுக்கும் இடையில் தொடர்புகளைப் பேண விரும்புகின்றோம் என்று யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்ட சீன நாட்டின் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகத்தைப் பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## தொண்டமனாறில் மனித எச்சங்கள் ஒதுங்கின



யாழ்ப்பாணம் வடமராட்சி கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் மேலும் ஒரு சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டமானாறு - சின்ன மலைபகுதிகடற்கரையில்உருக்குலைந்த நிலையில் மனித சடல எச்சங்கள் கரையொதுங்கிய நிலையில் காணப்பட்டன.

எலும்புகள் வெளித்தெரியும் வகையில் மிகவும் உருக்குலைந்த நிலையில் தொண்டமனாறு கடற்கரையில் மனித எச்சங்கள் கரை ஒதுங்கி உள்ளன என வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை நீதவான் கவனத்திற்கு வல்வெட்டித் துறை பொலிஸார் கொண்டு 09

## சீன நிறுவனத்துக்கு நிதி வழங்க மைத்திரி எதிர்ப்பு



சீன உர நிறுவனத்துக்கு இழப்பீடாக ஒரு சதம்கூட செலுத்தக்கூடாது. அத்துடன், சர்ச்சைக்குரிய சேதன பசளையை நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தவர்கள் தண்டிக்கப்பட 09

## எரிவாயுவுடன் தொடர்புடைய 727 விபத்துகள்

இலங்கையில் கடந்த 44 நாட்களில் எரிவாயு வெடிப்பு சம்பவங்களுடன் தொடர்புடைய 727 விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2

## கவிஞர் அஹ்னாப் ஜெஸீமுக்கு 19 மாதங்களின் பின்னர் பிணை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 19 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த கவிஞர் அஹ்னாப் ஜெஸீமுக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

தீவிரவாதத்தைப் பரப்பும் விதமான தமிழ் நூல் ஒன்றை வெளியிட்டதாக அஹ்னாப் ஜெஸீம் மீது குற்றச்சாட்டு 09

## துப்பாக்கி ரவைகள் பெருமளவில் மீட்பு!



கிளிநொச்சியிலுள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து பெருமளவு துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச 2

தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

காலம் - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்பதிலும் விட இன்னொரு விடயத்தில்தான் – விவகாரத்தில்தான் – முக்கிய கவனம் செலுத்தியிருக்கின்றது. அது – கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இல்லாத – அவரை ஓரங்கட்டி, புறம் ஒதுக்கிய – ஓர் அரசியல் தலைமையை தமிழர் தரப்பின் பிரதிநிதித்துவமாக வெளிக்காட்டச் செய்வதுதான்.

வடக்கு, கிழக்குத் தமிழர் தரப்புக்கு அப்பால் இந்தக் கூட்டத்துக்கு இரண்டு தலைவர்கள் வந்திருந்தனர். ஒருவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம். மற்றவர் – மனோ கணேசன்.

இந்த முயற்சி, அவ்வாறு சுமந்திரனை வெட்டி ஓடும் நிகழ்ச்சி நிரல் என்று புரிந்து கொண்டு கேள்வி எழுப்பியிருக்கின்றார் ஹக்கீம். அதை உறுதி செய்ய முடிந்தது.

மனோ கணேசன் தொடர்பில் எனக்குத் தெரியவில்லை. அதை அவர் புரிந்து கொண்டாரா, உள் வட்டங்களில் அது பற்றிக் கேள்வி எழுப்பினாரா அல்லது புரியாமல் விட்டு விட்டாரா அல்லது சுமந்திரனை வெட்டி அப்படி ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படுவதும் நல்லது என்று கருதி, மௌனம் சம்மதம் என்ற பாணியில் அவர் அமைதி காத்தாரா என்பதை அவர்தான் தெளிவுபடுத்த வேண்டும். தெளிவுபடுத்தினால் நல்லது.

இந்தக் கூட்டத்துக்கான அழைப்பை கடந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் வைத்து ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சம்பந்தனிடம் கையளித்தபோது, சம்பந்தன் அவரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

“இந்தக் கூட்டத்துக்கு சுமந்திரனுக்கு அழைப்பு உண்டா? அவருக்கு அழைப்புக் கொடுத்தீர்களா?” – என்பதுதான் கேள்வி.

‘இல்லை’ – என்று பதில் வந்தது செல்வத்திடமிருந்து.

“அவர் பங்குபற்றுவது முக்கியம். நான் அவரை என்னுடன் அழைத்து வரவா?” – என்று கேட்டார் சம்பந்தன்.

“இல்லை. இல்லை.கட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் அழைப்பு. தமிழரசுக் கட்சிக்குரிய அழைப்பு மாவை சேனாதிராசாவுக்கு வழங்கப்படுகின்றது.” – என்ற சாரப்பட பதில் அளித்திருக்கின்றார் செல்வம் அடைக்கலநாதன்.

இதற்கிடையில், இந்தக் கூட்ட ஏற்பாடு தொடர்பில் தம்முடன் தொடர்புகொண்ட செல்வத்திடம் மு.கா. தலைவர் ஹக்கீம் ஒரு கேள்வி எழுப்பினார்.

“இத்தகைய கூட்டங்களில் சுமந்திரனின் பிரசன்னம் முக்கியம் அல்லவா? அவரை அழைக்கவில்லையா?” – என்று கேட்டிருக்கிறார் ஹக்கீம்.

“அதுதானே சம்பந்தனுக்குச் சொல்லியிருக்கின்றோம். அவர் சுமந்திரனைக் கூட்டிவருவார்.” – என்ற சாரப்பட தமக்குப் பதில் தரப்பட்டது என ஹக்கீமே பின்னர் சுமந்திரடனிடம் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

கடந்த ஞாயிறு கூட்டத்துக்குச் சென்ற சம்பந்தனுக்கு எல்லாம் ஆச்சரியமாகவும் எரிச்சலாகவும் இருந்தன.

இந்திய அரசைக் கோரும் கடித ஆவணம் ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, ஒப்பமிட ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தமையையும் கூட அவர் புரிந்து கொண்டிருந்தார்.

கூட்டத்தின் முடிவில் ஊடகவியலாளர் முன்னிலையில் அந்த ஆவணத்தில் ஒப்பமிட்டு ஆரவாரப்படுத்துவது திட்டமாக இருந்திருக்கும் போல.

முதல் நாள் சனிக்கிழமை இரவு செல்வமும் ஏனையோரும் மனோ கணேசன் வீட்டில் போயிருந்து இந்த ஆவணத்தை இறுதிசெய்திருந்தனர். ஆனால், அன்றைய தினம் அந்த முயற்சிக்கு தமது உரையின் மூலம் ஆப்பு வைத்தார் சம்பந்தன் ஐயா.

“நான் இந்தக் கூட்டத்துக்கு என்னுடன் ஒருவரைக் கூட்டி வர விரும்பினேன். (அவர் அங்கு சுமந்திரனின் பெயர் குறிப்பிடவில்லை.) ஆனால் ஒரு கட்சிக்கு ஒருவர்தான் வரமுடியும் என்றார்கள். ஆனால் இங்கு ஒரே கட்சியில் மூன்று பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் இங்கு அழைக்கப்படவில்லை. இந்தச் சூழலில் நாம் இங்கு ஒரு முடிவையும் எடுக்க முடியாது. அத்தோடு எனது கட்சியினரோடு கலந்தாலோசனை செய்யாமல் எந்த ஆவணத்திலும் நான் ஒப்பமிட முடியாது.” – என்றார் சம்பந்தன்.

ஒரு கட்சியில் இங்கு மூன்று பேர் இருக்கின்றார்கள் என்று அவர் குறிப்பிட்டது ரெலோவை. அக்கட்சியின் சார்பில் இருந்த செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன் (ஜனா), சுரேந்திரன் குருசாமி ஆகியோரே அந்த மூவருமாவர். ஆனால் அக்கூட்டத்தில் உண்மையில் ரெலோவினர் ஐவர் இருந்தனர். வலி கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் நிரோஷும் இன்னொருவரும் அங்கு இருந்தனர். ஆனால்அவர்கள் ரெலோவினர் என சம்பந்தன் அடையாளம் காணாமையால் ஒரு கட்சியில் மூவர் என்று கட்சிப் பெயர் குறிப்பிடாமல் அவர் சுட்டினார்.

“நாங்கள் சும்மா ஒழுங்குபடுத்தலைப் பார்க்க வந்தோம்.” – என்று சமாளிக்க முயன்றார் ரெலோ செயலாளர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி.

நல்ல வேளை, ‘ஏற்பாடுகளைப் பார்ப்பதற்கு சுமந்திரனையும் நான் கூட்டி வருவதற்கு அனுமதித்திருக்கலாமே’ என்று சம்பந்தன் ஐயா கேட்காமல் விட்டார். (இது விடயத்தில் ரெலோவுக்குள் பலத்த அக்கப்போர் போய்க் கொண்டிருப்பதாகத் தகவல். நேரம் – வேளை – வரும்போது அது குறித்தும் விவரமாகப் பார்க்கலாம்.)

மாவைக்கு அழைப்பு அனுப்பாதமை குறித்து சம்பந்தன் பிரஸ்தாபித்த போது –

சித்தார்த்தன் எம்.பி. மூலம், மாவைக்கு எழுத்தில் அழைப்பு அனுப்பபட்டதாகக் கூட்ட ஏற்பாட்டாளர்களினால் சம்பந்தனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சித்தார்த்தன் அன்றைய கூட்டத்துக்கு வராமையால் வேலிக்கு ஓணான் சாட்சி என்ற மாதிரி கதையை முடிக்கப் பார்த்திருக்கின்றார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இந்தக் கூட்டம் கொழும்பில் நடந்தது. முதல் நாள் மாலை ஐந்து மணி வரை – தெல்லிப்பழையில் தமது மகனின் திருமண வரவேற்பில் பங்கு பற்றிய மாவை சேனாதிராசாவுக்கு – அங்கு வந்திருந்த சுமந்திரனும், சி.வீ.கே.சிவஞானமும் இப்படி ஒரு கூட்டம் நடைபெறுவது குறித்துக் கூறும் வரை – அது பற்றித் தெரியவேயில்லை என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

தமிழர் தரப்பில் இன்றும் பிரதான கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். என்னைக் கேட்டால் அதனுடன் ஒட்டிக் கொண்டிருப்பதால்தான் சில தரப்புகளுக்கு மக்கள் பிரதிநிதித்துவமே கிட்டுகின்றது என்பேன். அத்தகைய கட்சிக்கு அழைப்பேயில்லாமல் தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் தரப்புகளை ஒன்றிணைத்தல் என்பது வெறும் கீலாக் கூத்து அல்லாமல் வேறு யாதாக இருக்க முடியும்? சுமந்திரனை வெட்டி தமிழர் தலைமை என்ற பெயரில் சிலருக்குப் பட்டாபிகேம் செய்யும் சின்னத்தனமான எத்தனம்தான் இது. ஆனால் மாவை, சம்பந்தன் போன்றோரிடம் இந்தப் பருப்பு இனி வேகாது என்றே நினைக்கிறேன்.

எதிர்வரும் 21ஆம் திகதி மேற்படி கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணம் குறித்து இறுதி செய்து ஒப்பமிடத் திட்டமிட்டிருக்கின்றார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது அல்லவா?

அந்த ஆவண நகல் சம்பந்தன் ஐயாவிடம் உள்ளது. சுமந்திரன், மாவை உட்பட தமது தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களை அழைத்து, அது குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னர், தமது தரப்பு முடிவை சம்பந்தன் அறிவிப்பார் என்று நம்புகின்றேன். சில சமயங்களில் அந்த 21ஆம் திகதிக் கூட்டத்துக்குத் தனது பிரதிநிதியாக சுமந்திரனையே அவர் அனுப்பி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அமெரிக்காவுக்குத் தனது பிரதிநிதியாக சுமந்திரனை அனுப்பியவர், ரெலோ கூட்டும் கூட்டத்துக்கு சுமந்திரனைப் பிரதிநிதியாக அனுப்பவும் பின் நிற்க மாட்டார் என்று நம்பலாம்.

இதற்கிடையில் ஞாயிறு கூட்டத்தில் நடந்த விடயங்கள் குறித்து சம்பந்தன் ஐயா நேற்றுப் பகல் சுமந்திரனுடன் கருத்துப் பகிர்ந்தார் என அறியவந்தது.

அச்சமயம், சுன்னாகத்தில் நடந்த கூட்டத்தில் 13ஆவது திருத்தம் குறித்து சில விடயங்களைத் தாம் பகிரங்கமாகத் குறிப்பிட்டார் என்று கூறி, விடயங்களை விவரிக்க முயன்றார் சுமந்திரன். வழி மறித்தார் சம்பந்தன்.

“அதை நான் முழுமையாகப் பார்த்துச் செவிமடுத்தேன்.” – என்றார் சம்பந்தன் ஐயா. அது தொடர்பில் தமக்கு மாற்றுக் கருத்து, நிலைப்பாடு ஏதும் இருப்பதாக சம்பந்தன் ஐயா குறிப்பிடவில்லை. மாறாக, “அதை முழுமையாகப் பார்த்தேன்.” – என்ற அவரது பதிலில், அது தமக்கும் முழுத்திருப்தி, அதுதான் தமது நிலைப்பாடும் என்ற சம்பந்தனின் கருத்தும் பொதிந்திருந்தமையை சுமந்திரன் புரிந்து கொண்டார்.

இதற்கிடையில் –

வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடுகின்றது. கொழும்புக் கூட்டத்தின் எதிரொலிப்புகளை அங்கும் கேட்கக் கூடியதாக இருக்கும்.

ஆனால், தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவும், புளொட்டும் சேர்ந்து தமிழரசுக்கு ஆப்பு வைக்கும் காய் நகர்த்தல்களை முன்னெடுக்கின்றன என்ற கருத்து நிலைப்பாடு தமிழரசில் வளர்ந்து வருவது அக்கட்சிக்குள் முரண்பட்டு நிற்கும் தரப்புகளை ஒற்றுமைப்பட்டுச் செயற்பட தூண்டியிருக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கதாகும். அந்த ஒற்றுமைப்போக்கு ஞாயிறு மத்திய குழுக் கூட்டத்தில் பங்கு பற்றும் சுமார் ஐம்பது உறுப்பினர்களினாலுமே வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

வரவு – செலவுத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றித் தனது அரசியல் ஆளுமையை நிரூபித்திருக்கின்றார் யாழ். மாநகர மேயர் மணிவண்ணன்.

நேற்றிரவு வரை தமக்கு எதிராக தாழ்ந்திருந்த ஆதரவுத் தராசுத் தட்டை தம் பக்கம் தாழ வைத்த அவரின் திறமை பாராட்டுக்குரியது.

அவரின் அந்த வெற்றிக்குப்பின்னான பல விடயங்கள் பேசப்பட வேண்டும். வரும் நாள்களில் பேசுவோம்.

– மின்னல் –

---

## எதிர்ப்புகளை முறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் என 24 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும் என 21 பேர் எதிராக வாக்களித்தனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு பூங்காவன சந்திப் பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குழி ஒன்றை வெட்டியபோது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டமையையடுத்து கிளிநொச்சிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது

இதையடுத்து கடந்த திங்கட்கிழமை சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகள் அடங்கிய இரு பெட்டிகளை மீட்டமையுடன் இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக குறித்த பகுதி கிராம அலுவலர் கோணாமலை சேகர் முன்னிலையில் நேற்று முற்பகல் 9 மணி முதல் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த அகழ்வின்போது பெருமளவான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

---

## எரிவாயுவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்துகள் தொடர்பாக ஊடகங்களுக்குப் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் நேற்று அதிகாலை வரையான 44 நாள்களில் 727 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த 24 மணித்தியாலங்களில் எரிவாயுவுடன் தொடர்புடைய 24 சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

---

## குடாநாட்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன். நீண்ட கால வரலாற்றைக் கொண்ட யாழ். பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டமையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

யாழ். பொது நூலகத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் யாழ். மாநகர மேயர் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளருடன் கேட்டு தெரிந்துகொண்டேன். அவர்கள் நூலகம் பற்றிய முழு விவரங்களையும் எமக்கு விளங்கப்படுத்தியிருந்தனர். எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்துக்கும் சீனாவுக்கும் இடையில் தொடர்புகளைப் பேண விரும்புகின்றோம் – என்றார்.

அதேவேளை, அங்கு கருத்துத் தெரிவித்த யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், இன்று சீன நாட்டின் தூதுவர் யாழ். பொது நூலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு கணினிகளையும் மேலும் பல புத்தகங்களையும் நமக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்தோடு இந்த நூலகத்தை இணையவழியிலான நூலகமாக மாற்ற உதவ முடியுமா எனகே கோரிக்கையை முன்வைத்த போது தாங்கள் அது தொடர்பாக பரிசீலிப்பதாகத் தூதுவர் கூறியிருந்தார் – என்றார்.



# நசீரைக் கண்டால் கூட்டி வாருங்கள் விவாதத்துக்கு அழைத்து வாருங்கள்

## சாணக்கியன் பகிரங்க சவால்



நசீர் அஹமட் உடனான பகிரங்க விவாதத்துக்குத் தான் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனை பகிரங்க விவாதத்துக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் கடந்த சில தினங்களுககு முன்னர் அழைப்பு விடுத்திருந்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி நடத்தப்பட்ட விவாதத்தின் போது இரா.சாணக்கியன் வெளியிட்ட கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பகிரங்க விவாதத்துக்கான அழைப்பை விடுக்கிறேனன் என நசீர் அஹமட் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானுடன் சேர்ந்து காணி பிரச்சினை தொடர்பில் நாடகம் ஆடுகின்றனர் என இரா. சாணக்கியன் தெரிவித்த கருத்து தொடர்பில் பகிரங்கமாக விவாதிக்க வேண்டும் என தாம் விரும்புகிறேன் என நசீர் அஹமட் கூறியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில், மாவட்ட முஸ்லிம்களுக்குக் காணி தொடர்பில் இழைக்கப்பட்ட அநீதிகளை நாட்டு மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய தேவை தமக்குள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் - நசீர் அஹமட்டினை கண்டால் கூட்டி வாருங்கள், அவரை விவாதத்திற்கு அழைத்து வாருங்கள் எனக் குறிப்பிட்டார்.

## லிற்றோ எரிவாயுவை தரையிறக்க வேண்டாம்

லிற்றோ நிறுவனத்தால் கொண்டுவரப்பட்ட எரிவாயுவை, கப்பிலிலிருந்து தரையிறக்க வேண்டாமென அந்த நிறுவனத்துக்கு நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவிப்பு விடுத்துள்ளது.

குறித்த எரிவாயுவின் மாதிரியை சோதனைக்கு உட்படுத்தியபோது, அது இலங்கை தர நிர்ணய நிறுவகத்தின் தரநிலையுடன் பொருத்தமற்றது என உறுதியாகியுள்ளமையால் இந்த அறிவிப்பை விடுத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

லிற்றோ நிறுவனம், கடந்த சனிக்கிழமை கப்பல் ஊடாக இந்த எரிவாயுவை இலங்கைக்கு கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று பூஸ்டர் தடுப்பூசி செலுத்தல்

அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நோட்டன்பிரிட்ஜ் பகுதியில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனா வைரஸ் பூஸ்டர் தடுப்பூசி, நேற்று (புதன்கிழமை) செலுத்தப்பட்டது.

நோட்டன்பிரிட்ஜ் விதுலிபுர விகாரையில் இந்த தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்படி களவெல்தெனிய, விதுலிபுர வடக்கு, விதுலிபுர தெற்கு, கிரிவனெலிய மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேசங்களில் உள்ள 5 கிராம சேவக பிரிவுகளில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே இவ்வாறு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதில், ஏற்கனவே இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட சுமார் 1,100 பேர், 3 ஆவது பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியை செலுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாவிலிருந்து 335 பேர் குணமடைவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 335 பேர் குணமடைந்து, வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 46 ஆயிரத்து 103 ஆக அதிகரித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித்திங்கள் 10அம் நாள் சனிக்கிழமை மற்றும் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடுகூடியுள்ளது)

மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை (டிசெம்பர் 25)

அப்பர் சுவாமிகள் அமர்வு



காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் கோயில் பூசை

துவக்க உரை :- சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் ( நிறுவுனர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
தலைமை உரை :- பேராசிரியர்.சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா (துணை வேந்தர் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)
திருமுறை விண்ணப்பம் (அப்பர் தேவாரம்):- சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்
தொண்டு நெறி :- தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
அடியார் தமக்கு அமுது செய்வித்தல்:- மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

சம்பந்தர் சுவாமிகள் அமர்வு



மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை

தலைமை உரை :- சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (முதன்மை ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்)
திருமுறை விண்ணப்பம் (சம்பந்தர் தேவாரம்) :- கலாநிதி. திருமதி.சுகன்யா அரவிந்தன் குழுவினர்
மகன்மை நெறி :- தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
அடியார் பெருமை :- ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு
நன்றியுரை :- சிவத்திரு. அமிர்தலிங்கம் லதாங்கன் (பொதுச் செயலாளர் சைவ மாணவர் சபை)

மார்கழித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 26)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்வு



காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை

துவக்க உரை - சிவத்திரு.ஜெயபாலன் தவேதன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)
தலைமை உரை : சிவத்திரு.இளங்கோவன் இலட்சுமணன் (செயலாளர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்)
திருமுறை விண்ணப்பம் (சுந்தரர் தேவாரம்) - சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்.
தோழமை நெறி - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
அடியார் தமக்கு அமுது செய்வித்தல் - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

மாணிக்கவாசக சுவாமிகள் அமர்வு



மதியம் 1.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை

தலைமை உரை : சிவத்திரு.கணபதிப்பிள்ளை மகேசன் (அரசாங்க அதிபர் - யாழ் மாவட்டம்)
திருமுறை விண்ணப்பம் (திருவாசகம்) அன்பு நெறி - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
கௌரவிப்பு நிகழ்வு - தொகுப்பு: சிவத்திரு.தில்லையம்பலம் கௌரீசன் (பொருளாளர் - சைவ மாணவர் சபை)
நன்றியுரை - சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

அணிசெய் இசைக் கலைஞர்கள்

மிருதங்கம் - சிவத்திரு மகேந்திரன் லோகேந்திரன்
வயலின் - சிவத்திரு கேதீஸ்வரன் வேலதீபன்
புல்லாங்குழல் - சிவத்திரு.கமலநாதன் தேசிகன்
முகர்சங்கு - சிவத்திரு. கந்தசாமி நந்தகுமார்



நிகழ்ச்சித் தொகுப்பு: சிவத்திரு.செந்தமிழாதன் (தலைவர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு.பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 221 2739 075 653 3111

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# உண்மை வெற்றி யாருக்கு?

**“இலங்கையை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதன் மூலம் – பிணை எடுப்பதன் வாயிலாக – சீனாவின் பிடியிலிருந்தும் முழுமையாக இலங்கையை விடுவித்துத் தனது கைக்குள் இந்தியா கொண்டு வருகின்றது.**

**“தனது காலனித்துவத்தை விரிவுபடுத்தும் சீனாவின் எண்ணம், மெல்ல மெல்ல – அதே நேரம் உறுதியாக – மண் கவ்வும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.**

**தென்னாசியாவின் மிகப்பெரிய நாடான இந்தியா, தனது அயல் தேசமான இலங்கையை சீனாவின் பிடியிலிருந்து முழுமையாகவும், நிலையாகவும் மீட்டெடுப்பதில் வெற்றி காணும் நிலைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.”**

**– இந்தியாவின் பிரபல ஊடகம் ஒன்று இவ்வாறு கருத்துரைத்திருக்கின்றது.**

**பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்கும் திட்டம் இந்திய இராஜதந்திரத்தின் மிகப் பெரிய வெற்றி என்பது போலவும் –**

**இலங்கை இனி முழுமையாக இந்தியாவின் கைகளுக்குள் அடங்கி விடும் என்ற மாதிரியும் –**

**புதுடில்லித் தரப்புகள் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கின்றமையையே இத்தகைய செய்திகள் காட்டுகின்றன.**

**இவ்விடயத்தில் இந்திய இராஜதந்திரத்தை எண்ணிப் பெருமைப்படுவதா அல்லது ஏளனம் செய்வதா என்பது தெரியவில்லை.**

**பட்டறிவைக் கவனத்தில் கொள்ளாத இராஜதந்திரமாகத்தான் இது தோன்றுகின்றது.**

**இந்த விவகாரத்தில் இந்திய இராஜதந்திரத்துக்கு வெற்றி என்று புதுடில்லி கொண்டாடுவதில் அர்த்தம் உண்டா? அல்லது உண்மையான வெற்றி இலங்கைக்கா? – சிந்தனைக்குரிய கேள்வி இதுதான்.**

**இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட அரசியல் சூழமைவுகளும், அதன் பின்னர் அரங்கேறிய நிகழ்வுகளும் நமக்குத் தெரிந்தவைதான்.**

**தனக்குப் பக்கத்தில் இருக்கும் பிராந்திய வல்லாதிக்க நாடு ஒன்றுக்குத் தான் வழங்கிய உறுதிமொழிகளை சின்னஞ்சிறு தீவு எவ்வாறு நிறைவேற்றாமல், இழுத்தடித்து, வாக்குறுதிகளுக்கு மேல் வாக்குறுதிகளை வழங்கி, ஏமாற்றியது என்பதற்கு இலங்கை – இந்திய நாடுகளுக்கு இடையிலான கடந்த நான்கு தசாப்தகால உறவு நிலைமை நல்ல சான்றாக அமையும்.**

**ஒரு புறம் இந்தியாவுடன் நல்லுறவையும் நட்பையும் பேணியபடி, மறுபுறம் இந்தியாவின் பகைமை நாடான சீனாவுக்குத் தனது நாட்டில் வெற்றிலை வைத்து, செங்கம்பளம் விரித்து வரவேற்று இடமளித்தது கொழும்பு.**

**பொருளாதார நெருக்கடியில் சிக்கி நிற்கும் இலங்கை, தனக்கும் – சீனாவுக்கும் இடையில் இருக்கும் உறவு நிலையையே பிணைப் பொருளாக்கி, அதற்காக மிகப் பெரும் பொருளாதார மீட்புத் திட்டத்தை – பிணை எடுப்பு நடவடிக்கையை – இந்தியா முன்னெடுக்க அந்தப் பெரும் தேசத்தை நெட்டித் தள்ளியிருக்கின்றது.**

**அப்படியானால் இந்த விடயத்தில் உண்மை வெற்றி யாருக்கு? சீனாவின் பிடியிலிருந்து இலங்கையை மீட்கும் மார்க்கத்தை வகுத்து விட்டோம் என்று துள்ளிக் குதிக்கும் புதுடில்லிக்கா? அல்லது சீனாவுடனான, தனது உறவு நிலையையே நல்ல முதலாக்கி, அதன் மூலம் தனது பொருளாதார நெருக்கடிப் பாரத்தை புதுடில்லியைச் சுமக்க வைத்து விட்டோம் என்று தன்னைத் தானே மெச்சிக் கொள்ளும் கொழும்புக்கா?**

**எது, எப்படியாயினும், ஒரு விடயத்தை இந்தச் சமயத்தில் புதுடில்லிக்குச் சுட்டிக் காட்டுவது கட்டாயமானதாகும். வாக்குறுதி கொடுப்பதிலும், அதை செயற்படுத்தாமல் மீறி ஏமாற்றுவதிலும் பௌத்த – சிங்கள் பேரினவாதப் போக்குக் கொண்ட கொழும்பு அரசுகள் ஏனைய இத்தகைய நாடுகளை விட மிகமோசமானவை.**

**‘ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் – தம்பி உறவு; அதன் பின் நீ யாரோ, நான் யாரோ’ – என்பதுதான் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் மாறாப் பண்பியல்பு. பல நூற்றாண்டுகளாக அந்த இனத்துடன் சேர்ந்து வாழ்ந்த தமிழர்களின் பட்டறிவு அதுதான். இந்தியா திரும்பவும் ஒரு தடவை அதைப் படிக்கப் போகின்றது. அவ்வளவுதான்.**

# முழு சிங்கள மொழியில் வருகின்ற அழைப்பாணையை ஏற்கமுடியாது

## ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அறிவித்தார் மனோ



கொஹுவலை வலய பொலிஸ் நிலையம் மூலமாக, கொண்டு வந்து தரப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பாணை முழு சிங்கள மொழியில் மாத்திரம் இருந்த காரணத்தால், அதைத் தமிழ் மொழியில் அனுப்புமாறும், அதுவரை அதை ஏற்று தன்னால் விசாரணைக்கு சமுகமளிக்க முடியாது எனவும் தமிழ் மொழியிலான ஒரு மின்னஞ்சல் பதில் கடிதத்தை, விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு, மனோ கணேசன் அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் நீண்ட காலமாக நடக்கின்றன. பல எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை அழைக்கப்பட்டார்கள். நான் அழைக்கப்படவில்லை.

இந்நிலையில் இப்போது திடீரென நான் அழைக்கப்பட்டுள்ளேன். ஏன் இந்த திடீர் அழைப்பு எனத் தெரியவில்லை. தனது மூன்றில் இரண்டு பலத்தைப் பயன்படுத்தி, கடந்த ஆட்சியின் முழு அமைச்சரவையையும், குற்றம் சாட்டி தண்டனைக்கு உள்ளாக்க முடியும் என்ற பாணியில் ஜனாதிபதி சமீபத்தில் பேசி இருந்தார். அதன் வெளிப்பாடோ இதுவெனத் தெரியவில்லை.

இந்த அழைப்பாணை முழுக்க சிங்கள மொழியில் மாத்திரம் இருக்கின்றது. இந்நிலையில் இதை ஏற்று என்னால், விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்கு வர முடியாது என அறிவித்து விட்டேன்.

அத்துடன் எனக்கு சிங்கள மொழியில் இந்த அழைப்பாணை அனுப்பி இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஆணையாளர்கள், இலங்கை அரசமைப்பின் 4ஆம் அத்தியாயம், 22ஆம் விதி (2), (ஏ) பிரிவுகளை மீறியுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டி உள்ளேன்.

இலங்கை அரசமைப்பின் 4 ஆம் அத்தியாயம், 22ஆம் விதி (2), (ஏ) என்ற சட்ட விதிகளின்படி இலங்கையின் எந்தவொரு பிரஜையும், எந்தவொரு அரசு அலுவலகத்தில் இருந்தும், தமிழ் மொழியில் எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும், தொடர்பாடல்களைப் பெற உரிமை கொண்டவர்கள் என்பதையும், நான் ஒரு தமிழர் என்பதை அறிந்த நீங்கள், இலங்கையின் சக ஆட்சி மொழியான தமிழ் மொழியில், என்னுடன் தொடர்பாடல் செய்யத் தவறி, அரசமைப்பு சட்ட விதிகளை மீறியுள்ளீர்கள் எனவும், நான் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குச் சுட்டிக்காட்டியுள்ளேன்.

எதுவானாலும் முதலில் தமிழ் மொழியில் இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பாணை வரட்டும். அப்புறம் விசாரணைகளை அவசியமானால் சந்திப்பேன். ஆனால், அங்கேயும் பிழையில்லா தமிழ் மொழியில் இவர்கள் எனது வாக்கு மூலத்தை எழுதிப் பதிவு செய்ய வேண்டும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பிரிவினைவாதம் தலைதூக்க இனி ஒருபோதும் இடமில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெம். 16

கடந்த இரண்டு வருடங்களாக, தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதிலும் தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும், இலங்கையின் முப்படையினர் பாரிய பங்களிப்பை ஆற்றியுள்ளனர் என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

‘கடந்த இரண்டு வருடங்களில், முப்படையினரின் செயற்பாடுகள்’ என்ற தலைப்பில், ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (புதன் கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பாதுகாப்புச் செயலாளர், இன்று நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், பிரிவினைவாதம் தலைதூக்குவதற்கு இடமில்லை என்றும் இலங்கையர் எவரும் தேவையின்றி அச்சப்படத் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

அரச புலனாய்வுப் பிரிவினரும் ஏனைய புலனாய்வுப் பிரிவினரும் இன்று ஒரே பலமான வலையமைப்பாகச் செயற்படுகின்றனர் எனவும் கமல் குணரத்ன தெரிவித்தார்.

உயிர்த் தியாகம் செய்து போர் வீரர்கள் பெற்றுக்கொடுத்த சுதந்திரமும் நாட்டின் தேசிய பாதுகாப்பும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் கேள்விக்குறியாகின.

கடந்த ஆட்சியின் போது விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப் படவில்லை எனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குடும்பங்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நீதிமன்றக் கட்டமைப்புக்கு அவசியமான அனைத்து உதவிகளையும் வழங்குகிறேன் எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

நாடு இராணுவ மயமாக்கப்படுகிறதா என்ற கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, ஓய்வுபெற்ற சில இராணுவ அதிகாரிகள் அரசாங்கப் பதவிகளை வகிப்பது ஒருபோதும் இராணுவமயமாக்கல் அல்ல.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் பல வருடங்களாகப் பெற்றுக்கொண்ட தமது அறிவு மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்தி, நாட்டுக்கும் மக்களுக்கும் சேவைபுரிவது ஒரு தவறான விடயமா என்றும் கேள்வி எழுப்பினார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதுடன், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் இராணுவத்தினரின் பொறுப்பாகும். இதில் இராணுவத்தினர், கடற்படை மற்றும் விமானப்படையினர் முக்கிய பங்காற்றி வருகின்றனர் எனவும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

கடந்த இரண்டு வருடங்களில், நாட்டின் அபிவிருத்திக்காக இலங்கையின் முப்படையின் பங்களிப்பை தெளிவுபடுத்திய இராணுவத் தலைமையகத்தின் ஊடகப் பணிப்பாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன, நாட்டின் அபிவிருத்திக்காக இலங்கை இராணுவத்தினர் அதிகபட்ச அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர் எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, கொரோனாத் தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கையில் இலங்கை இராணுவத்தினர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். சிகிச்சை நிலையங்கள், தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் இடைநிலை சிகிச்சை நிலையங்களைப் பராமரிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

அத்துடன், தடுப்பூசி வேலைத்திட்டத்தில் இராணுவத் தளபதியின் வழிகாட்டலின் கீழ் பாரிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமையோடு, பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டுக்கும் முக்கிய பங்காற்றினர் எனவும் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# டெங்கு மற்றும் கொரோனா இரட்டைச் சுமையில் நாடு!

## மக்களுக்கு எச்சரிக்கை

டெங்கு மற்றும் கொரோனாவின் இரட்டைச் சுமையில் இலங்கை சிக்கியுள்ளதால், பண்டிகைக் காலத்துக்கு முன்னதாக பொதுமக்கள் எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த தசாப்தத்தில் மிகக் குறைவான டெங்கு வழக்குகள் பதிவாகிய ஆண்டாக 2020 இருந்ததாகவும் இந்த ஆண்டில் குறிப்பாக நவம்பர் மாதத்தில் பதிவான தொற்றுக்களின் எண்ணிக்கை கவலையளிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் பண்டிகைக் காலத்துக்கு முன்னதாக தொற்றுக்கள் அதிகரிக்கும் வாய்ப்பு எப்போதும் உள்ளதாகவும் இரண்டு தொற்றுநோய்களும் ஒரே நேரத்தில் தாக்கினால், நிலைமை நிச்சயமாகப் பயங்கரமாக இருக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, மக்கள் சுகாதார விதிகளைப் பின்பற்றுவதை உறுதிசெய்து, தொற்றுநோயைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை, கொழும்பு மாநகரசபையில் நாளொன்றுக்கு 10 கொரோனா நோயாளிகள் மாத்திரமே கண்டறியப்படுகின்றனர் எனவும் இறப்பு எண்ணிக்கையும் திருப்திகரமான மட்டத்தில் இருப்பதாகவும் வைத்தியர் விஜயமுனி தெரிவித்தார்.

நாட்டில் தற்போது, 20 இறப்புகளுடன் தினசரி சுமார் 740 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகும் அதேவேளையில், டிசெம்பர் மாதத்தில் மட்டும் இதுவரை 1,500 டெங்குத் தொற்றுக்கள் பதிவாகியுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், கடந்த 18 மாதங்களில் இல்லாத அளவுக்கு 4 ஆயிரத்து 561 டெங்கு தொற்றுக்கள் நவம்பர் மாதத்தில் பதிவாகியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# விடுதலைப் புலிகளுடையதென நம்பப்படும் மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் மீட்பு!

கிளிநொச்சி- முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின்போது, தமிழீழ விடுதலைப் புலிகளுடையது என நம்பப்படும் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மற்றும் ஆயுத தளபாடங்களை நீதிவான் பார்வையிட்டுள்ளார்.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் கொடியேற்ற விழா ஏற்பாடு நடந்தது

இலங்கை அரசால் தேசிய நிகழ்வாக அறிவிக்கப்பட்டுள்ள கல்முனைக்குடி நாகூர் ஆண்டகைதர்ஹாஎன்றழைக்கப்படும் கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 200 ஆவது கொடியேற்றவிழா அடுத்தவருடஆரம்பத்தில் நடைபெற வுள்ளது.

இது தொடர்பில் எவ்வாறு விழாவை நடத்துவது என்பது தொடர்பிலும், முத்திரை வெளியிடுவது தொடர்பிலும் இன்னும் பல முக்கிய தீர்மானங்களை எடுப்பது தொடர்பிலுமான கலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். றக்கீப், கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி. அன்ஸார், கல்முனைக்குடி நாகூர் ஆண்டகை தர்ஹா மற்றும் கல்முனை முஹையத்தீன் ஜும்மா பெரியபள்ளிவாசலின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ், உலமா சபையினர், கல்முனைக்குடி நாகூர் ஆண்டகை தர்ஹா மற்றும் கல்முனை முஹையத்தீன் ஜும்மா பெரியபள்ளிவாசலின் நிர்வாக சபையினர், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டு விழா நிகழ்வுகள் தொடர்பில் கலந்துரையாடினர்.



# வீதியை சீரமைக்க பிரதேச செயலருக்கு வவுனியா– சிதம்பரம் பகுதி மக்கள் மகஜர்

வவுனியா– கள்ளிக்குளம், சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த மக்கள், தமது அடிப்படை பிரச்சினைகளை தீர்த்துவைக்குமாறு வவுனியா பிரதேச செயலாளருக்குமகஜர்கையளித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர்கள் –

இந்தக் கிராமத்தில் இருந்து பிரதான வீதிக்கு செல்லும் 10 கிலோ மீற்றர் நீளமான வீதி, நீண்டகாலமாக புனரமைக்கப் படாததுடன் குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றது.

தற்போது மழையுடனான காலநிலை நிலவிவருகின்றமையால், அந்த வீதியைப் பயன்படுத்தும் கிராமமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே தமது பயணத்தைத் தொடர்கின்றனர்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் முதல் வைத்தியசாலை செல்லும் நோயாளர்கள் வரை அனைவரும் சொல்லொணாத் துன்பங்களுடனேயே தமது பயணத்தை தொடர்கின்றனர். இதேவேளை, எமது கிராமத்துக்கு பஸ் சேவையும் நீண்டகாலமாக இல்லாத நிலைமை காணப்படுகின்றது. கூலித் தொழிலை நம்பி வாழ்க்கை நடத்தும் நாம், நகருக்கு செல்லவேண்டுமானால் 1,000 தொடக்கம் 1,500 ரூபா வரையான பணத்தை ஓட்டோவுக்கு வழங்கியே சென்று வருகின்றோம்.

எனவே, எமது நிலைமையை உணர்ந்து உரிய அதிகாரிகள் வீதியை சீரமைப்பதுடன், பஸ் சேவையையும் ஏற்படுத்தித் தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களது கோரிக்கையைப் பரிசீலித்த உதவிப்பிரதேச செயலாளர் ச.பிரியதர்சினி அடுத்த வருடம் வகுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களில் கிராமத்தின் வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கிறேன் எனத் தெரிவித்தமையுடன், பஸ் சேவை தொடர்பாக அதனுடன் தொடர்புடைய திணைக்களத்துடன் கலந்துரையாடுகிறேன் எனத் தெரிவித்தார்.

# எரிவாயு வெடிப்பு பாதித்தவர்களுக்கு இலவச சட்ட உதவிகள் வழங்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

நாடு முழுவதும் எரிவாயு வெடிப்பால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐக்கிய மக்கள்சக்தி இலவச சட்ட உதவியை வழங்கும் என்றும் அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தயாராக உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தரம் இல்லாத அரசாங்கத்தைக் கொண்ட நாட்டில் தரமான எதையும் எதிர்பார்க்க முடியாது என்றும் தரமற்ற ஆட்சியை அகற்றுவதே மேற்கொள்ள வேண்டிய விடயம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தரமற்ற உர இறக்குமதியால் நாடு பெரும் பேரழிவிற்குள் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் பொருளாதாரத்தையும், விவசாய சமூகத்தின் வாழ்க்கையையும் அரசாங்கம் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் கூறினார்.

# அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட உரத்துக்கு 67 லட்சம் டொலர்களை வழங்கத் தீர்மானம்

சீன உர நிறுவனத்துக்கு 67 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உறுதிப்படுத்தினார்.

அதே நேரம் இலங்கையின் தரநிலைகளுக்கு இணங்க உரங்களை மீள் உற்பத்தி செய்ய சீன உர நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட செட்டிகுளம் பிரதேச சபையின் 'பட்ஜட்' வெற்றி

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 4 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று (செவ்வாய்க்கிழமை) சபைத் தவிசாளர் சு.ஜெகதீஸ்வரன் அவர்களால் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து பாதீடு தொடர்பாக சபை உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டது.

இதன்போது பாதீட்டை வாக்கெடுப்புக்கு விடுமாறு உறுப்பினர்கள் கோரியமையையடுத்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பாதீட்டுக்கு ஆதரவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 05, ஈ.பி.ஆர்.எல்.எவ். 03, தமிழ் தேசிய மக்கள் முன்னணி 01, முஸ்லிம் காங்கிரஸ் 01 என 10 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

பாதீட்டுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் (சிறிரெலோ) 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் ஆக 6 பேர் வாக்களித்தனர்.

இதனால் 4 மேலதிக வாக்குகளால் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு வெற்றிபெற்றது. பொதுஜனபெரமுனவின் ஓர் உறுப்பினர் பாதீட்டு வாக்கெடுப்பின் போது நடுநிலைமை வகித்திருந்தார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆளுகைக்குள் இருந்த செட்டிகுளம் பிரதேச சபையின் பாதீடு கடந்த வருடம் தோற்கடிக்கப்பட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 222

**574. தமிழ் நெற் குழுமம் அப்படியான கருத்தொற்றுமை தமிழர் தரப்பில் ஏற்படாது தடுக்க வேண்டும் என்ற பரப்புரைகளை மேற்கொண்டார்களா?**

முதலில் யாவருக்கும் அரசியல் கருத்து சுதந்திரம் உண்டு. தங்கள் மனதுக்குச் சரியெனப்பட்டவற்றை தமது கருத்துக்களாகத் தமிழ் மக்கள் முன்வைப்பதும் மதிக்கப்பட வேண்டும். மாற்றான் வீட்டு மல்லிகையும் வாசம் தரும் என்பதை உணர வேண்டும். தமிழ் நெற் இவற்றை பரப்புரையாக்கியது:-


வரதகுமார்


“இந்த வேலைத்திட்ட ஆலோசனைக்குள்(தமிழர் தகவல் நிலையம் முன்னெடுத்த இந்தியாவுக்கான சமர்ப்பணம்) ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் நீதியரசர் விக்னேஸ்வரனும் அவ்வப்போது உள்வாங்கப்பட்டிருந்தனர் என்பதை தமிழர் தகவல் நடுவ வட்டாரங்களூடாக அறிந்து கொள்ள முடிகிறது. ‘காலைக்கதிர்’ பத்திரிகையில் எழுதி வரும் புலம்பெயர் எழுத்தாளர் ஒருவரும் இம் முயற்சிக்கான உந்து சக்தியாகச் செயற்பட்டிருக்கிறார் எனவும் அறிய முடிகிறது. இணக்க அரசியலை காந்தீயம் என்ற போர்வையில் பிரித்தானியாவில் இயங்கும் ஈழத் தமிழர் அமைப்புகளுக்கூடாக ஒரு புறம் புகுத்துவதற்கும், மறுபுறம் சரிந்து செல்லும் ராஜபக்ஷவின் கீர்த்தியைத் தென்னிலங்கைச் சிங்கள தரப்புகளிடம் தக்க வைக்கும் நோக்கிலும் கிளாஸ்கோ பருவநிலை மகாநாட்டுக்குச் செல்லுமாறு தூண்டியதன் மூலம் அவருக்கு தென்னிலங்கை கடும் போக்காளர்களிடையே தேவைப்படும் அங்கீகாரத்தை நிமிர்த்திக் கொடுப்பதற்கும் சூழலியலும் மற்றும் பருவநிலைத் தளங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் மேற்கு, சீனா, இந்தியா ஆகிய அனைத்து தரப்புகளுடனும் தொடர்புபட்ட இணக்க அரசியல் பயன்படுகிறது. எரிக் சொல்ஹெய்ம், மிலிந்த மொறகொட போன்றவர்கள் இதில் ஒவ்வொரு புள்ளிகளாக இருப்பர் என்பது இலகுவாக ஊகிக்கப்படக் கூடிய ஒன்று”

- தமிழ் நெற் தரப்பினர் தங்களது ஊகங்களின் அடிப்படையில் எவ்வளவு மீன்களை கொள்ளமுடியுமோ அதற்காகவே விரிவான வலை ஒன்றை பின்னியுள்ளனர்.

அந்த உந்து சக்தியாக, காலைக்கதிரின் எழுத்தாளராக தமிழ் நெற் யாரைக் குறிப்பிடுகிறது என ஊகித்திருப்பீர்கள்.

ஆனால் அது எழுத்தாளராக அல்ல, எழுதப்பட்ட வரலாறுகள் தமிழ் மக்களை இனப்படுகொலைக்கோ இனவழிப்புக்கோ எப்படி எடுத்துச் சென்றன என்பது பற்றியும், அவற்றின் அரசியலை ஆராய்ந்ததற்காக மட்டும்தான் உந்து சக்தியாக இருந்தேன் என்பதை ஏனோ தவறவிட்டுள்ளார்கள். காலைக்கதிரில் முன்னர் “இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒரு திசை நோக்கு” என்பது போன்ற வரலாறுகளை நான் எழுதியிருந்தாலும், இந்தத் தொடரை ஆரம்பிக்கும் முன் ஒரு அறிமுகத்துக்காக சில பின்னணிகளை என்னைப்பற்றி கேட்ட போது, இது எனது சுயபுராணம் பற்றியதல்ல எனத் தவிர்த்து விட்டேன். கட்டுரையில் தினம் வரும் முகப்பு விடயம் கூட ஆசிரியர் வித்தியாதரன் தம்பாட்டில் வரைந்ததே. தமிழர்களின் உரிமைகளுக்கான செயற்பாட்டு பரப்பில் 1976 தொட்டு சம்பந்தர் முதன்முறையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி வந்த காலம் முதல், விடுதலைப் போராளிகள் உருவாகி, வளர்ந்து, பிரிந்து கூறுகளாக செயல்பட, எல்லாத் தளங்களிலும் உரிமைப்போருக்கு பக்கபலமாக நின்ற அமைப்புகளுடனும் இணைந்து பணியாற்றிய அர்ப்பணிப்புகளாலும் தொடக்க காலத்திலிருந்து தமிழர் தகவல் நிலையத்தோடு இணைந்திருந்தாலும்தான் உந்து சக்தியாக ஈடுபட்டேன்.

நான் எழுதியவை,அவற்றை ஒட்டி வைத்த சில கருத்துக்களுடன் காலைக்கதிர் ஆசிரியருக்கு வேறுபாடுகளிருந்தாலும், கருத்து சுதந்திரத்துக்காகவும், வரலாறுகளை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவரது வேட்கையினாலும், அவர் அதனில் தலையீடு செய்தவரல்லர். இந்தத் தொடர் ஆக்கமாக – ஆளுமையாக – வளர்ந்ததற்கு அவரின் ஊடகப் பண்பும் காரணம்.


மிலிந்த மொறகொட

**575. தமிழர் தகவல் நிலையத்தின் (Tamil Information Center) பின்னணி என்ன?**

இந்த வருடத்து சர்வதேச மனித உரிமை தினத்தில் அதன் தலைவர் டாக்டர் ரட்னேஸ்வரன் சுருக்கமாக, நிலையம், தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்புகளின் கட்டமைப்புகள் அவிழ்த்து விடப்பட்ட 1977 - 1983 காலங்களில் லண்டனில் தொடக்கப்பட்டதையும், அன்றிலிருந்து பலர் அதனுடன் இணைந்து தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புகள் செய்தமையையும் குறிப்பிட்டார். அதனோடு இயங்கி செயற்பட்டவர்கள், மனித உரிமைகள் பற்றிக் கவனமெடுத்து, அது உண்மையாக, நம்பிக்கையானதான அரசியல் சார்பற்றதாக தகவல்களைத் தருவதில் உறுதியாக இருந்தார்கள். அந்த உறுதிதான், அதனைப் பல புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து வேறுபடுத்தியது. தனது தகவல்களோடு தாங்களும், அந்த நம்பகமான தகவல்களின் அடிப்படையில் பல அமைப்புகளும் தமிழ் அரசியல் உரிமைகள் பற்றி வாதாட உதவியாக இருந்தது.

இது தமிழ் அகதிகள் புனர்வாழ்வு


எரிக் சொல்ஹெய்ம்

கழகத்தின்(TRRO) பிரித்தானிய துணை அமைப்பின் பக்க பலமான அமைப்பாக, யாழ்ப்பாணத்தில் பொது நூலகமும், ஈழநாடு, சற்றடே ரிவியூ போன்ற பத்திரிகைகளும் எரிக்கப்பட்டு, அடக்கப்பட்டு, இயங்க முடியாதவையாக்கப்பட்ட போது நிறுவப்பட்டு, தொடர்ந்தும் இயங்கி வருகிறது. அதன் ஆளுமை சர்வதேசப் பரப்பில் அறியப்பட்டது.

**576. தமிழர் தகவல் நிலையம் ஏன் அந்த முன்னெடுப்பைத் தொடங்கியது?**

தமிழ் மக்களுக்காக தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருந்த முயற்சிகளும் வாதாடு களத்திலும் போருக்கு பின் எல்லா தமிழ் அரசியல் கட்சிகளையும் சுவிற்ஸர்லாந்தில் ஒரு கூட்டத்திற்கு அழைத்து அங்கு நடந்தவை பற்றி கூறியிருந்தேன். பின்னர் லண்டனில் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளை அழைத்து, தமிழ் மக்களின்பலஅலகுகளைஒட்டியசம்பாஷணை ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர். அதைத் தொடர்ந்த சிலகாலங்களின் பின் தகவல் நிலையத்தின் உயிர் நாடியாக இருந்த வரதகுமார் எதிர்பாராதவிதமாக மாரடைப்பால் காலமானமையால் பல பின்னடைவுகள் ஏற்பட்டன. வரதகுமாரின் நினைவு நாளில் உரையாற்ற நானும் அழைக்கப்பட்டிருந்தமையைத்தொடர்ந்து, தமிழ் மக்கள் தொடர்ந்து அனுபவிக்கும் கட்டமைக்கப்பட்ட அழிவுகளுக்காகத் தகவல் நிலையம் வாதாடுதலை மேற்கொள்ளவேண்டும் என்ற அபிப்பிராயம்


செல்வம்

வளர்ந்தது.

இடையில் நான் உறவினர் ஒருவருடைய மரணச் சடங்கில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வர, அந்த மரணச் சடங்கில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அங்கஜன் இராமநாதன், சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா போன்றோரையும் சந்திக்க நேர்ந்தது. நிலைமைகள் பற்றி அளவளாவவும் முடிந்தது.

அப்பொழுது செல்வம் அடைக்கலநாதன் பாரதப் பிரதமர் மோடியுடனான கூட்டமைப்பின் தலைவர்களின் சொற்ப நேர சந்திப்பில் நடந்தவற்றை விவரித்து, நாட்டிலிருந்து செய்யக்கூடியவை வலுவாகச் சுருங்கி விட்டமையால் புலம் பெயரிலிருந்துதான் முயற்சிகள் வர வேண்டும், உங்களைப் போன்றோர் அவற்றை முன்னெடுக்க வேண்டும் என்றார். தான் நாடாளுமன்றத்தில் எல்லா கூட்டமைப்புப் பிரதிநிதிகளுடனும் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்துகிறேன், சம்பந்தனும் வருவார் என்று என்னை வரக் கோரினார். எனக்கு எஞ்சிய நாள்கள் குறைவானதாலும், எல்லா நாடாளுமன்றத்தினருக்கும் நேர




ஒதுக்கீடு இல்லாததாலும் அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை. அதன் பிறகு தொடர்புகளில் எல்லோருக்குமே சில சில கட்டமைப்புக்கள் ஏற்படுத்தபட வேண்டிய தேவை பற்றியும், முக்கியமாக வெளிவிவகாரங்களைக் கவனிக்க கூடிய சர்வதேச தமிழ் மக்களின் கட்டமைப்பு உடனடியாக அமைக்கப்பட் வேண்டிய தேவையையும் வலியுறுத்தினேன். இவை எல்லாவற்றிலம் மேலாக, தமிழ் மக்கள் இந்தியாவை அணுகி அதனூடான உறவை வலுப்படுத்த வேண்டிய தேவையையும், பல தரப்புக்களுடன், விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து இயங்குபவரோடும் கூடக்கூடிசம்பாஷித்து அதனை முன்னெடுக்கக் கூடிய தன்மைகள் தமிழர் தகவல் நிலையத்துக்கு உண்டு எனக் கணித்து, அவர்களுடன் பேசி ஊக்குவித்து, எல்லா அரசியல் கட்சிகளும் இணைந்து, அரசியல் தீர்வுக்காக இந்தியாவிற்கு சமர்ப்பணம் தர முயற்சிப்பது எனப் பூர்வாங்கமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உடனடியாகவே புலம்பெயர் பகுதிகளில் பதின்மூன்றாம் திருத்தத்தையும் இந்தியாவுடனான உறவையும் மேலும் வலுப்படுத்த எடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்கு காலைவாரும் முயற்சிகள் வழமை போல் தொடங்கின. அதற்கு வரவேற்பளிக்காத நிலைப்பாடே தமிழ் நெற்றினது ஆக்கங்களில் இருந்தது. அவர்களது கட்டுரை கோப்புக்களில் 13 ஆம் திருத்தத்திற்குப் பதிலாக “புதிய அணுகுமுறை” கையாளப்பட வேண்டும் என்பதே முன்வைக்கப்பட்டது.

(வளரும்....)

# வடக்கு - கிழக்கு முதலமைச்சராவேன் என மக்களை ஏமாற்றுகின்றார் சாணக்கியன்

## கஜேந்திரன் எம்.பி. சாட்டை



சிங்கள மயமாக்கத்தையோ, பௌத்த மயமாக்கத்தையோ தடுக்க முடியாத நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மக்களை ஏமாற்றுவதற்காக இணைந்த வடக்கு - கிழக்கு முதலமைச்சர் என்ற ஒரு விடயத்தைத் தெரிவித்து தொடர்ந்து ஏமாற்ற மக்கள் ஏமாளிகள் அல்லர் என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

தமிழர் தாயகத்தில் இடம்பெறுகின்ற பௌத்தமயமாக்கம் சிங்கள மயமாக்கம் போன்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்தாவிடின் தமிழ் தேசத்தின் இருப்பை நாங்கள் பாதுகாக்க முடியாது என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமாயின் தமிழ் தேசத்தின் இறைமை என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழர்களின் சுயநிர்ணய உரிமை போன்று ஒரு சுயாட்சி எட்டப்பட வேண்டும்.

இவ்வாறு இல்லாமல் வெறுமனே வடக்கு, கிழக்கை இணைப்பதன் ஊடாக மாத்திரம் இந்த குடியேற்றங்களையோ அல்லது பௌத்தமயமாக்கல் விடயங்களையோ தடுத்துநிறுத்த முடியாது.

ஏனெனில் அதிகாரம் முழுவதும் அவர்களது (அரசு) கைகளிலே உள்ளது. அதே வேளை வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டிருந்தாலும் அங்கு ஆளுநருக்கு தான் அதிகாரம். அதேபோன்று அந்த ஆளுநருக்கு கீழ் உள்ள உத்தியோகத்தர்கள் ஆளுநரின் கட்டளைப் படி தான் நடப்பார்கள்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையில் கூட முதலமைச்சரின் செயலாளரையும் ஆளுநர் தான் நியமிப்பார். அங்கே சகல கட்டுப்பாடுகளும் ஆளுநரின் கீழ் தான் இருக்கும். ஆகவே, மக்களின் வாக்குகளை பெறுவதற்காக பல்வேறு கருத்துக்களைக் கூறமுடியும்.

ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக ஒரு போதும் சிங்கள மயமாக்கத்தையோ, பௌத்த மயமாக்கத்தையோ தடுக்க முடியாது. இது 1987, 1988 ஆண்டுகளில் இருந்து மாகாண சபை உருவாக்கப்பட்ட நாளில் இருந்து இந்த மாகாண சபை நடைமுறையில் தான் இருக்கின்றது. இச்சபை இணைந்தும் இருந்தது. குடியேற்றம் அந்த வேளையிலும் இடம்பெற்றிருந்தது.

அப்போது ஆயுதப்போராட்டத்தால் குடியேற்றங்கள் தடுக்கப்பட்டு கொண்டிருந்ததே தவிர இந்த மாகாண சபையின் நிர்வாகத்தின் ஊடாக கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தான் உண்மையான விடயம். சாணக்கியன் எம்.பி. மக்களை ஏமாற்றுவதற்காக சொல்கின்ற ஒரு விடயமாகும்.

என்னைப் பொறுத்தமட்டில் அவர்கள் தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகளை வழங்கி வந்தமை வரலாறு. 2015 ஆண்டு எமக்குக் கடைசி சந்தர்ப்பம் ஒன்றைத் தாருங்கள் என்று கூறினார்கள்.

அதாவது வடக்கு - கிழக்கு இணைந்த தாயகத்தில் ஒரு சமஷ்டி தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருவோம் என்றெல்லாம் கூறினார்கள். அதே போன்று 2016 ஆண்டு இறுதிக்குள் யுத்த குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவோம் என்று கூறினார்கள். மக்கள் அதனை நம்பி பெருவாரியாக வாக்குகளை இவர்களுக்கு வழங்கி இருந்தார்கள்.

வென்ற மறு வாரமே சுமந்திரன் எம்.பி. சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று கூறினார். ஜெனிவாக்குச் சென்று உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு பெற்று கொடுத்தார்கள்.

இப்படி இவர்களது ஏமாற்றுக்களை தேர்தலை மையப்படுத்தி செய்கின்றார்கள். இவர்களது இவ்வாறான நாடகங்களை மக்களும் அறிவார்கள்.

முழுக்க முழுக்க ஏமாற்றும் விடயங்களே இவர்களிடம் உள்ளன. மக்கள் இவர்களது பசப்பு வார்த்தைகளை நம்பி ஏமாந்து விடக்கூடாது என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். - என்றார்.

# நாட்டின் தலைவர்கள் எப்போதும் உண்மையையே பேச வேண்டும்

## கெவிந்து எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கம் நாட்டையும் மக்களையும் ஏமாற்ற முயல்கிறதா என்பது தொடர்பில் பாரிய கவலைகள் எழுந்துள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எஹலியகொடவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், தற்போதைய நிர்வாகம் நாட்டை தவறாக வழிநடத்துகின்றதா என கேள்வியும் எழுப்பினார்.

மேலும் நேர்மையான நோக்கத்துடன்தான் அனைத்து பதவிகளையும் தான் ஏற்றுக்கொண்டேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாட்டின் தலைவர்கள் உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என கெவிந்து குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் நாடும் உலகமும்



பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றது. இந்நிலையில் தொடர்பான சிரமங்களை எதிர்கொள்ள ஒரே வழி, பொது மக்களுடன் வெளிப்படையான உரையாடலில் ஈடுபடுவதுதான் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாடசாலை மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்கு

## நுவரெலியாவில் சம்பவம்

நுவரெலியா - ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட நோர்வூட், எலிபடை தமிழ் வித்தியாலய மாணவர்கள் 14 பேர், நேற்று (புதன்கிழமை) காலை 7.30 மணியளவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில், டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போது, அப்பகுதியில் இருந்த மரத்தில் காணப்பட்ட குளவிக் கூடே இவ்வாறு கலைந்து வந்து, அவர்களைக் கொட்டியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தரம் 5, 7, 8, 9, 10, 11 வகுப்பறைகளைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்களில் 4 பேர் தொடர்ந்தும் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 10 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மட்டு. மாநகரசபையின் ஆணையர் கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்

மட்டக்களப்பு மாநகரசபையின் புதிய ஆணையாளராக நிர்வாக சேவை அதிகாரியான பொறியியலாளர் ந.சிவலிங்கம் நேற்று (புதன்கிழமை) தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

புதிய ஆணையாளரை மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் உத்தியோகத்தர்கள் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து ஆணையாளர் கையெழுத்திட்டு தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மாநகரசபை உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கடமையைப் பொறுப்பேற்றார்.


இதன்போது மாநகர முதல்வர் மற்றும் உத்தியோகத்தர்களால் புதிய ஆணையாளருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

இலங்கை நிர்வாக சேவை (தரம் -1) உத்தியோகத்தரான இவர் உலக வங்கி திட்டத்திலும் , பின்னர் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார்.



இதுவரை மட்டக்களப்பு மாநகர ஆணையாளராகப் பதவி வகித்த மா.தயாபரனுக்கு பதிலாக புதிய ஆணையாளராக ந.சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கவிஞர் அஹ்னாப் ஜஸீம் பிணையில் விடுதலை!




கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜஸீமை புத்தளம் மேல் நீதிமன்றம், நேற்று (புதன்கிழமை) பிணை வழங்கி விடுதலை செய்துள்ளது.

'நவரசம்' என்ற கவிதைத் தொகுப்பு நூலில், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் எழுதியுள்ளார் என அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர், கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் புத்தளம் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# தமிழ் மக்களுக்கு ஒற்றை ஆட்சிக்குள் ஒருபோதும் தீர்வு கிடைக்கமாட்டாது!



## தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தை புறக்கணித்த காரணம் இதுவே!

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்ளே தமிழ் மக்களுக்கு ஒருபோதும் தீர்வு கிடையாது என்ற நிலைப்பாட்டில் தாங்கள் மிகத் தெளிவாக இருக்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் கூட்டத்தில் பங்கேற்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்த்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார்.

இதேநேரம், மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இந்த முயற்சியில் ஈடுபடுகின்றமை தங்களுக்கு மிக மனவேதனையாக உள்ளது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இரா.சம்பந்தன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், செல்வம் அடைக்கலநாதன், சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட மேலும் சில கட்சிகளின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இருப்பினும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தனிப்பட்ட விஜயமாக டுபாய்க்கு சென்றார் நிதி அமைச்சர் பஸில்



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று காலை டுபாய் சென்றுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் அவரது மனைவியும் பயணத்தை மேற்கொண்டிருந்தார் என அறியமுடிகின்றது.

நள்ளிரவு 12.55 மணிக்கு எமிரேட்ஸ் விமானம் ஈகே - 649 இல் இருந்து டுபாய்க்கு புறப்பட்டனர் என்றும் விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இது தனிப்பட்ட பயணம் என வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 14 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு 3ஆவது டோஸ் செலுத்த ஏற்பாடு

இலங்கையில் 14 லட்சத்து 40 ஆயிரத்து 705 பேருக்கு கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 20 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு இலங்கைப் பிரஜையும் இரண்டாவது கொரோனா தடுப்பூசியை பெற்று மூன்று மாதங்கள் கடந்திருந்தால், மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள எந்தவொரு தடுப்பூசி நிலையத்திலும் இந்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

நாட்டில் புதிதாக 762 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிசெய்யப்பட்டமையைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 76 ஆயிரத்து 194 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றால் 20 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்படி நாட்டில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 661 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் கைப்பாவைகளாக மக்கள் பிரதிநிதிகள் மாறியுள்ளனர்

### முன்னாள் எம்.பி. லால்காந்த குற்றச்சாட்டு

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகள் அல்லர். நிறைவேற்று ஜனாதிபதியின் கைப்பாவைகளாகவே இருக்கின்றார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

ஆகவே, நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு மக்களிடம் உள்ள ஒரே மாற்று தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கமே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே கே.டி.லால்காந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரச சொத்துக்கள் அனைத்தையும் மீட்பதற்கு, ஆட்சி அதிகாரத்தைத் தம்மிடம் வழங்குமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தற்போதைய நிர்வாகம், நாட்டை ஒரு மூலைக்கு கொண்டு சென்றுள்ளது. ஆகவே, நடைமுறையில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, தற்போதைய அரசாங்கத்திடம் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பது வீண் என கே.டி.லால்காந்த சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, நாடாளுமன்றம் கைப்பாவைகளால் நிரம்பியுள்ளதுடன், அங்கு இருப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகள் அல்லர். அந்தவகையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நாட்டுக்கு பொருந்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருள் இறக்குமதியில் சிக்கல் நிலை ஏற்படலாம்

### கம்மன்பில சுட்டிக்காட்டு

எதிர்வரும் மாதங்களில் எரிபொருள் இறக்குமதியில் சிக்கல் நிலை ஏற்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருளை வாங்குவதற்கு ஒரு மாதத்துக்கு சுமார் 42 கோடி டொலர் செலவாகும் என்றும் அவர் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கான முனைப்புகளே நாட்டில் இடம்பெறுகின்றன



### உதயகுமார் எம்.பி. காட்டம்

நாட்டிலே ஜனநாயகம் இல்லை. அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கான முனைப்புகளே இடம்பெறுகின்றன. மக்கள் பிரதிநிதிகளுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

தற்கால அரசியல், தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, நெருக்கடியான சூழ்நிலை உருவாகியுள்ளது. இன்னும் 3 மாதங்களுக்குள் இந்நிலைமை மேலும் மோசமாகும். எனவே, தனது இயலாமையை ஏற்றுக்கொண்டு ஆட்சியைக் கைவிட்டு, இந்த அரசு செல்ல வேண்டும்.

நாட்டிலே ஜனநாயகம் இல்லை. அராஜக ஆட்சியை முன்னெடுப்பதற்கான முனைப்புகளே இடம்பெறுகின்றன. மக்கள் பிரதிநிதிகளுக்குக்கூடப் பாதுகாப்பு இல்லை. ஆளுங்கட்சியில் உள்ள பங்காளிக்கட்சி உறுப்பினர்களே தாக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

எனவே, ஆளுங்கட்சி மூலம்தான் இந்த அரசுகூட கவிழ்க்கப்படும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன். நாட்டில் பல பிரச்சினைகள் தாண்டவமாடும் நிலையில் ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ளார். நிதி அமைச்சரும் அமெரிக்கா செல்கின்றார்.

அதேவேளை, சம்பள நிர்ணய சபை ஊடாகத் தீர்மானம் எட்டப்பட்டு வர்த்தமானி மூலம் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு உறுதிப்படுத்தப்பட்டது. பட்டாசு கொளுத்தி, பாற்சோறு சமைத்து இதனை காங்கிரஸினர் கொண்டாடினர்.

வர்த்தமானி மூலம் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமை. அதற்கான அழுத்தங்களை அரசில் இருப்பவர்கள் பிரயோகிக்க வேண்டும். அதனைவிடுத்து தற்போது போராட்டங்களை நடத்துவது நாடகமாகும். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பருத்தித்துறை முனைப் பகுதியை பார்வையிட்டனர் சீன அதிகாரிகள்




(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான சீனத் தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்துள்ளனர்.

அவர்கள் பருத்தித்துறை முனைப் பகுதியைப் பார்வையிட்டனர் .

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையில் சீன அதிகாரிகள் இரண்டு நாள் பயணமாக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழகம் அருகில் வாள்வெட்டு!
## இளைஞர் ஒருவர் படுகாயம்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி - பரமேஸ்வரா சந்திப் பகுதியில் இளைஞர் ஒருவரை கும்பல் ஒன்று துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளது.

சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் அந்தப் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். நகரப் பகுதியை நோக்கி குறித்த இளைஞர் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, இரண்டு மோட்டார் சைக்கிள் களில் பின் தொடர்ந்த நால்வர் இளைஞரை பரமேஸ்வரா சந்தியில் வழி மறித்து வாள் வெட்டை மேற்கொண் டனர்.

கும்பலின் தாக்குதலில் இருந்து தப்பித்து, பல்கலைக்கழகம் பக்கமாக இளைஞர் தப்பியோடியபோதும் அவர் துரத்தித் துரத்தி வாளால் வெட்டப்பட்டார்.

வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த இளைஞர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றமை மாணவர்கள் மத்தியில் அச்ச நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நயினாதீவில் சடலம் மீட்பு!

யாழ்., நயினாதீவு தண்ணீர்த்தாங்கி குளத்துக்கரை அருகே அடையாளம் காணப்படாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த நபர் பல நாள்களுக்கு முன் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்படுவதால் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

கடந்த வியாழக்கிழமையில் இருந்து நயினாதீவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமல்போயிருந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பொலிஸாரால் ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

### சீன நிறுவனத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர், இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

சீன நிறுவனத்திடமிருந்து உரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாக அது தொடர்பில் ஆராயப்பட்டிருக்கும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது நிபுணர்கள் எவரேனும் சீனா சென்று விடயங்களை ஆராய்ந்த பின்னரே உரத்தை நாட்டுக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருப்பார்கள்.

எனவே, அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். அவர்களிடமிருந்து பணத்தை அறிவிட வேண்டும். மக்கள் பணத்தில் இருந்து ஒரு சதம்கூட செலுத்தப்படக்கூடாது - என்றார்.

### கவிஞர் அஹ்னாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று புத்தளம் மேல் நீதிமன்றம் இவருக்குப் பிணை வழங்கியுள்ளது.

இவரது கைது எழுத்து மற்றும் ஊடகச் சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல் என்று பல சிவில் சமூக அமைப்புகளும் தெரிவித்திருந்தன.

மேலும், இவர் வெளியிட்ட தமிழ் மொழி மூலமான நூலில் பயங்கரவாதத்தைப் பரப்பும் எவ்வித கவிதைகளும் இடம்பெறவில்லை என்று சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு மாதத்தின் முதலாம் மற்றும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் பயங்கரவாதத் தடைப் பிரிவின் புத்தளம் அலுவலகத்தில் கையொப்பம் இட வேண்டும் என்றும் நீதிமன்றம் இவருக்கு உத்தரவிட்டுள்ளது.

# வல்வெட்டித்துறை நகர பிதாவாக மீண்டும் செல்வேந்திரா தெரிவு!



(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக சபாரத்தினம் செல்வேந்திரா மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் பாதீடு கடந்த மாதம் இரு தடவைகள் தலைவர் ச.செல்வேந்திராவால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று புதிய தலைவருக்கான தெரிவு இடம்பெற்றது.

இதன்போது மீண்டும் சுயேச்சைக் குழு சார்பில் செல்வேந்திரா போட்டியிட்ட நிலையில் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# வவுனிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு!

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, வவுனிக்குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற இளைஞர் படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அம்பாள்புரம் 5ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த விஜயரட்ணம் நிலவன் (வயது 24) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வவுனிக்குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற வேளை, படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி குறித்த இளைஞர் காணாமல்போயிருந்த நிலையில், குளத்தினுள் தேடுதல் மேற்கொண்ட நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார். மீட்கப்பட்ட இளைஞரின் சடலம் மாங்குளம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திருமலை ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

திருகோணமலை பிறீமா தொழிற்சாலையிலிருந்து நேற்றுமுன்தினம் சீதுவ நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் சீனக்குடா -கொட்பே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தொண்டமனாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வந்தமையைத் தொடர்ந்து மனித எச்சங்களை நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டார்.

அந்த மனித எச்சங்கள் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படடன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக இவ்வாறு அடையாளம் தெரியாத சடலங்கள் தொடர்ந்து வடக்கில் கரையொதுங்கி வருகின்றமைமை குறிப்பிடத்தக்கது.

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## வவுனியா வடக்கில் துப்பாக்கிச் சூடு



பெண் உயிரிழப்பு

வவுனியா நெடுங்கேணி பகுதியில் பெண் ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப் பட்டதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) காலை 11.30 மணி யளவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா - நெடுங்கேணி - சேனைப்பி லவு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற் கொள்ளப்பட்டதில் குறித்த பெண் சம்பவ இடத் திலேயே பலியாகியுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் பாலசுந்தரம் சத்திய கலா 34 வயதுடைய பெண்ணே இவ்வாறு பலியாகியுள்ளார்.

விவசாயத் தேவைக்காக பசளை வாங்க தாயாருடன் சென்ற நிலையில் உணவருந்தி விட்டு செல்ல முடிவெடுத்து மீண்டும் வீடு நோக்கி செல்கையில் வீதியில் நீர் நிறைந்திருந்தமை யால் தாயாரை வீதியில் இறக்கிவிட்டு நீர் நிறைந்திருந்த இடத்தை கடந்த போதே துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆரம்பக் கட்ட விசார ணைகளில் நாட்டுத் துப்பாக்கியால் சுடப்பட்டே உயிரிழந்துள்ளார் எனவும் எதற்காக துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது போன்ற பல்வேறு கோணங்களில் பொலிஸார் மற்றும் இராணு வத்தினர் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந் நிலையில் குறித்த துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்டனர் என சந்தேகிக்கப்படும் நபர் இறந்த பெண்ணின் உறவினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றமையுடன் ஏற்கனவே கொலைக் குற்றத்துக்காக சிறையில் இருந்து வந்த ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட்டல்களை மேலும் 15 நாள்களுக்கு நீடிக்கத் தீர்மானம்

கொழும்பு, டிசெ. 16

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சுகாதார வழிகாட் டல்களை மேலும் 15 நாள்களுக்கு நீடிக்கத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

# கிளி. கோரக்கண் கட்டுப்பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன

கிளிநொச்சிக்கு கோரக்கண் கட்டுப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு பூங்காவன சந்திப்பகுதி யில் உள்ள தனியார் காணி ஒன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை சம்பவ இடத் துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகள் அடங்கிய இரு பெட்டிகளை மீட்டமையுடன் இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக குறித்த பகுதி கிராம அலுவலர் கோணாமலை சேகர் முன்னிலையில் நேற்று (புதன்கிழமை) பகல் 9 மணி முதல் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.



இந்த அகழ்வின் போது பெருமளவான துப்பாக்கி ரவை கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சவுதி நோக்கிச் சென்ற விமானம் அவசரமாகத் தரையிறங்கியது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சவுதி அரேபியாவின் தமாம் நோக்கிச் சென்ற விமான மொன்று மீண்டும் அவசரமாக கட்டுநாயக்காவில் தரையி றக்கப்பட்டுள்ளது.

அதாவது ஹைட்ரோலிக் அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் கட்டு நாயக்காவில் தரையிறக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக் கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த ஏ320 எயார்பஸ் விமானம் 5.45 மணிக்கு புறப்பட்டு, இரவு 7.55 மணிக்கு தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இதன்போது 146 பயணிகள் மற்றும் 11 பணிகுழாம் உறுப்பினர்கள் உட்பட 156 பேர் இந்த விமானத்தில் இருந்துள்ளனர். இந்நிலையில் குறித்த அனைவரையும் மற்றுமொரு விமானத்தின் ஊடாக மீள அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.






# மைக்ரோ ரக கைதுப்பாக்கியை விற்க முயன்றவர் அம்பாறையில் கைது

அம்பாறை - காரைதீவு பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய மைக்ரோ ரக கைத்துப்பாக்கி ஒன்றை 16 லட்சம் ரூபாவுக்கு விற்கமுற்பட்ட ஒரு வரை பொலிஸாருடன் விசேட அதிரடிப் படையினர் இணைந்து கைது செய்துள் ளனர் என காரைதீவு பொலிஸார் தெரி வித்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக் குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய சம்பவதினமான நேற்றுக் காலை காரை தீவு விபுலானந்த வித்தியாலய வீதியி லுள்ள சட்டவிரோதமாக ஆயுதங்களை வாங்கி விற்கும் ஒருவரின் வீட்டை இரா ணுவ புலனாய்வு பிரிவு பொலிஸார் மற் றும் விசேட அதிரப்படையினருடன் இணைந்து வீட்டை முற்றுகையிட்ட போது மைக்ரோ ரக கைதுப்பாக்கி ஒன் றும் இரண்டு மகசீன்களில் 16 ரவைக ளுடன் 44 வயதுடைய ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஆரையம்பதி யிலுள்ள சட்டவிரோத துப்பாக்கி வியாபாரி ஒருவர் மூலம் முல்லைத்தீவு ஒட்டுசுட் டான் பகுதியில் ஒருவரிடமிருந்து 5 லட்சம் ரூபாவுக்கு வாங்கினார் எனவும் அதனை 16 லட்சம் ரூபாவுக்கு விற்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டார் எனவும் விசேட அதிரடிப்படையினரின் ஆரம்பகட்ட விசா ரணையில் தெரியவந்துள்ளது இதில் கைது செய்யப்பட்டவரை பொலிஸ் விசாரணை யின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலி ஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து தந்தையும் மகளும் சாவு; மூவர் படுகாயம்!

கொழும்பு, டிசெ. 16

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, மில் லனிய பகுதியில் காரொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இரு வர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த காரில் பயணித்த தந்தையும் (வயது - 39) மகளுமே (வயது -4) இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் மூவர் படுகாயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர் எனப் பொலிஸார் கூறியுள்ள மையுடன் மேலதிக விசாரணையை யும் முன்னெடுத்துள்ளனர்.

# கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தின் தொழில்நுட்ப அதிகாரி விபத்தில் சாவு

கட்டுநாயக்க விமானப்படைத் தளத் தில் கடமையாற்றும் தொழிநுட்ப உத்தி யோகத்தர் ஒருவர் கடவத்தை மங்கட வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கப் வாகனத்துடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கடவத்தை கோனஹேன பகுதியில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கப் வண்டியின் சாரதி பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை மஹர நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.12.2021 இல் வெளியிடப்பெற்றது.